## சீரொன்று தனியன்

ஸ்வாமி வேதாந்த தேசிகனின் தனியன்களில் ஒன்று:

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

ஸ்வாமியின் மேன்மைக்கேற்ற தனியனே. இருப்பினும், இதை இயற்றியவர் யார் என்பதில் சர்ச்சை பல காலமாக உள்ளது.

மூவாயிரப்படி குரு பரம்பரை என்னும் க்ரந்தத்தில், இதை எழுதியவர் ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் என்றும், தேசிகனிடத்தில் ரஹஸ்யார்த்தங்களைக் கற்ற பின் இதைச் செய்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

இப்படி உள்ளது சரியா, இதற்கு ஆதார பூர்வமான சான்றுகள் உள்ளனவா என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கு.

அதற்கு, முதற்கண் தனியன் என்றால் என்ன, அதை யார் எதற்காக இயற்றுகின்றனர் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தனியன் என்பது ஒருவரை புகழும் பாசுரமோ, ஸ்லோகமோ ஆகும். அந்த அடிப்படையில், வேதாந்த தேசிகன் மீது தனியன்களை ஒருவர் இயற்றுவது என்பது சால ஏற்புடையதே. ஆசார்ய ஸ்ரேஷ்டரான ஸ்வாமி, சிறந்த மேதையாகவும், கவி ஸிம்ஹமாகவும், தர்க்க ஸிம்ஹமாகவும் திகழ்ந்தவர் ஆவார்.

ஆனால், நம் ஸம்ப்ரதாயத்தில் ஏற்படும் தனியன்கள் சாமான்ய புகழ்ச்சிச் செய்யுள்கள் அல்ல.

அவைகளுக்குள்ள சில தனித்துவங்கள் என் என்னில்:
1. அவைகள் ஒரு ஆழ்வாருக்கோ அல்லது ஒரு ஆசார்யருக்கோ, பெரும்பாலும் அவருடைய நேர் சிஷ்யர்களாலோ, அல்லது தம்மை அவரடி பணிந்தவராகவே கொண்டிருக்கும் ஒருவராலோ இயற்றப்படுகின்றன.
2. இத்தனியன்கள் அவர்கள் இவ்வுலகில் இருக்கும் நாட்களிளேயே சமர்ப்பிக்கப்படலாம், அல்லது அவர்கள் இவ்வுலகை நீத்த பிறகும் கொடுக்கப்படலாம்.
3. அபூர்வமாக, சில சமயங்களில் ஒருவருடைய ஆசார்யரே அவருக்கு ஒரு தனியனைக் கொடுப்பது என்பதும் உள்ளது.

ஆக, இந்தத் தனியனைப் பிள்ளை லோகாசார்யர் இயற்றினார் என்றால், அவருக்கும் தேசிகனுக்கும் இடையே என்ன உறவு இருந்தது என்று நாம் ஆராய வேண்டும்.

இவர்கள் காலத்துச் சரித்திரம் தெளிவாக ஏடுபடுத்தப்படவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. இருப்பினும், பொதுவாகப் பலராலும் ஒப்புக் கொள்ளப்படும் விஷயம் எதுவோ அதையே நாமும் கொள்ளலாம். அதாகிறது, இவர்கள் இருவரும் கலாப காலத்திற்கு முன் திருவரங்கத்தில் வாழ்ந்து வந்தார்கள் என்பதே.

அப்படி என்றால், இவர்கள் இடையே ஆசார்ய சிஷ்ய உறவு இருந்ததா என்பது கேள்வி ஆகிறது. இதில் யார் ஆசார்யர், யார் சிஷ்யர் என்பதை நாம் ஆராயத் தேவை இல்லை - இரண்டிற்கும் பதில் ஒன்றே. அப்படிப்பட்ட உறவு இருந்ததற்கு ஆதாரம் ஏதும் இல்லை என்பதே விடையாம்.

அதன்றி, இவ்விருவர்க்கும் ஸம்ப்ரதாய விஷயங்களில் அபிப்ராய பேதம் இருந்தது என்பதற்கு ஆதாரம் உள்ளது. 'எம்பெருமானுடைய அடியார்கள் இடையில் அபிப்ராய பேதங்கள் இருக்கலாம்; ஆனால் அதனால் அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் வைத்திருக்கும் கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படாது' என்பது தேசிகனுடைய திருவுள்ளம், என்பதை அவரே ஏடுபடுத்தி இருக்கிறார். இது பொதுவாகத் தோன்றினாலும், பிள்ளை லோகாசார்யரை நினைவில் கொண்டே எழுதப்பட்டது என்பது பெரியோர்களின் கருத்து.

ஆக, இவ்விருவருக்கும் அத்தகைய உறவு - அதாவது, ஆசார்ய சிஷ்ய ஸம்பந்தம் இருந்திருக்கப் ப்ரசக்தியில்லை.

தனியனுக்கு ஆசார்ய சிஷ்ய ஸம்பந்தம் தேவையா என்றால், அப்படி இருப்பதால் தான் "ஸ்ரீஶைலேஶ தயாபாத்ரம்" என்னும் தனியனை ஒரு சிலர் நம்பெருமாள் மணவாள மாமுனிகள் விஷயமாக அருளி இருக்க மாட்டார் என்று இன்றளவும் எதிர்ப்பது கண்கூடு.

இந்த ஸம்பந்தம் இல்லாமல், ஒரு வேளை இதைப் பொதுவாகவே பிள்ளை லோகாசார்யர் இயற்றி இருக்கலாமோ என்ற கேள்வி எழக் கூடும். அவ்வாறு மூவாயிரப்படியில் இல்லை என்றாலும், இதை அடுத்து ஆராய்வோம்.

இதற்கு இவ்விருவருக்கும் உள்ள வயது வித்யாசத்தைப் புரிந்து கொள்வது அவச்யமாகிறது.

வேதாந்த தேசிகனின் காலம் கிபி 1268 முதல் 1369 வரை என்பது பொதுவான கருத்து. பிள்ளை லோகாசர்யர் கிபி 1205 வருடம் பிறந்தார் என்கிறது பெரிய திருமுடி அடைவு என்னும் க்ரந்தம். இவர் 108 அல்லது 120 வருடங்கள் இவ்வுலகில் இருந்தார் என்று நாம் அறிகிறோம்.

இதைக் கொண்டு பார்க்கும் போது, பிள்ளை லோகாசார்யர் தேசிகனை விட 63 வருடங்கள் மூத்தவர் என்று தேறுகிறது. சில வல்லுனர்களின் அபிப்ராயத்தில் இந்த இடைவெளி இதை விடச் சற்று குறைவென்றிருந்தாலும், இருவருக்கும் இடையில் அதிகமான வருடங்கள் இருந்தன என்றே தெரிகிறது. இருவரும் சம வயதுடையவர்கள் என்று சிலர் கூறும் கருத்திற்கு ஆதாரம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆக, தேசிகன் திருவரங்கத்திற்கு எழுந்தருளும் போது, அங்கு பிள்ளை லோகாசார்யர் ஸ்ரீவைஷ்ணவ ஆசார்ய பதவியை அலங்கரித்திருந்தார் என்பது தெளிவு. அதனால், அவர் தம்முடைய அஷ்டாதச ரஹஸ்யங்களைப் பெரும்பாலும் இயற்றத் தொடங்கி விட்டார் அல்லது இயற்றி முடித்து விட்டார் என்றும் நாம் கொள்ளத் தடையில்லை. மேலும், இருவருடைய ரஹஸ்ய க்ரந்தங்களை ஆராயுமிடத்து, தேசிகனின் ஸம்ப்ரதாயக் கொள்கைகளைப் பிள்ளை உலாகாரியன் ஏற்றுக் கொண்டார் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

அப்படி இருக்க, 'தேசிகனிடத்தில் ரஹஸ்யார்த்தங்களை அதிகரித்து, இந்தத் தனியனை பிள்ளை உலகாரியன் சமர்ப்பித்தார்' என்பது ஏற்புடைத்தாக இல்லை.

இறுதியாக, பல பெரியோர்கள் 'தூப்புல்' என்னும் பெயர் 'தும்பை வனம்' என்ற பெயரிலிருந்து மருவி வந்ததென்றும், இந்தத் தும்பை வனம் என்பது பிள்ளை லோகாசார்யர் மற்றும் வேதாந்த தேசிகன் காலத்திற்குப் பின்னர் வந்த அப்பைய தீக்ஷிதர் என்பவரால் உருவாக்கப்பட்ட அக்ரஹாரம் என்றும் கூறுகின்றனர். அப்படி என்றால், அவ்வார்த்தையைப் பிள்ளை உலகாரியன் பயன்படுத்தி இருக்க வாய்ப்பில்லை.

இத்தால் தேறுவது என்னவென்றால்:
1. பிள்ளை லோகாசார்யருக்கும் வேதாந்த தேசிகனுக்கும் இடையில் ஆசார்ய சிஷ்ய ஸம்பந்தம் இல்லை
2. தேசிகனைக் காட்டில் லோகாசர்யர் சுமார் ௬௩ வருடங்கள் மூத்தவர்
3. ஶ்ரீரங்கத்தில் தேசிகன் வாழ்ந்து வந்த போது அவர் கொண்டிருந்த கருத்துக்களை லோகாசர்யர் ஏற்கவில்லை
4. தேசிகனிடத்தில் லோகாசார்யர் ரஹஸ்யார்த்தங்களை அதிகரிக்கவில்லை
5. தூப்புல் என்ற பெயர் இருவருடைய பிற்காலத்தில் ஏற்பட்டது

இவற்றைக் கொண்டு பார்க்கும் பொது, இத்தனியனை பிள்ளை லோகாசார்யர் இயற்றவில்லை என்றும், அப்படிச் சொன்னது சிலருடைய உத்வேகத்தாலும், அவாவினாலும் என்றும் நாம் கொள்ளும்படி ஆகிறது.

இம்முடிவினால் இந்தத் தனியனிற்கு எந்தக் குறையும் இல்லை. இதை இன்னார் இயற்றினார் என்று முரண்படச் சொல்லாமல், அதனுடைய அர்த்தத்தின் சீர்மையையும் அத்தால் சொல்லப்பட்ட ஆசார்யரின் மேன்மையையும் மட்டும் நாம் மனதில் கொண்டு அதை அநுசந்தித்தலே சாலச் சிறந்தது.

குற்றம் குறைகளைப் பொறுத்தருள வேணுமாய்ப் ப்ரார்த்திக்கிறேன்.

அடியேன் மதுரகவி தாசன்
TCA Venkatesan

---

**பின்குறிப்புக்கள்:**

1. பிள்ளை லோகாசார்யர் பிறந்த வருடம் கிபி 1205 என்பது பெரிய திருமுடி அடைவில் உள்ளது.

2. முகலாயரின் படையெடுப்பு பல முறை நடந்துள்ளதால், அவர் நம்பெருமாளை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு திருவரங்கத்தை விட்டு எந்த ஆண்டு வந்தார் என்பது சரியாகத் தெரியவில்லை. கிபி 1311ல் ஏற்பட்ட படையெடுப்பில் புறப்பட்டார் என்றால், அவருடைய காலம் 1205-1313 (திருவரங்கத்தை விட்டுச் சென்று இரண்டு வருடங்களுக்குப் பிறகு அவர் ஆசார்யன் திருவடி அடைந்தார் என்பர்) - அதாவது 108 வருடங்கள். 1323ல் ஏற்பட்ட உலூக்கானின் படையெடுப்பில் அவர் புறப்பட்டார் என்றால், அவருடைய காலம் 1205-1325 -அதாவது 120 வருடங்கள்.

3. பெரும்பாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட வேதாந்த தேசிகனின் காலம்: கிபி 1268-1369.